[15th March 1965

(b) if so, the action proposed by the Government thereon?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM :

(a) Yes, Sir.

(b) The Government do not consider it necessary to reconsider its decision to locate the College of Indian Systems of Medicine at Courtallam.

திரு. வை. சங்கரன் : சார், இது குற்றாலத்தில் இல்லாமல், ஆஸ்பத்திரி பக்கத்தில் இருக்கும் டவுனில், திருநெல்வேலி போன்ற நகரத்தில் இருந்தால், ட்ரெயினிங் கொடுக்க சாதகமாக இருக்கும் என்ற காரணத்தினால், குற்றாலத்தில் இருப்பதை மாற்றி திருநெல்வேலி போன்ற நகரத்தில் வைக்க புனராலோசனை செய்து ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஸார், இதில் மறு பரிசீலனை செய்யவேண்டியது ஒன்றும் இல்லை. குற்றாலத்தில்தான் மூலிகை வகைகள் கிடைக்கும் என்ற காரணத்தினால், அங்கே அருவிகள் இருக்கிற காரணத்தினால் அங்கே வைத்தியம் செய்வதுதான் சௌகரியமாக இருக்கும் என்று தீர்மானிக்கப்பட்டது. அந்த முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II. STATEMENT *re* : CONDUCT OF THE PROCEEDINGS OF THE HOUSE.

MR. SPEAKER : I would like to make a statement now. In the unhappy task of taking action against an hon. Member of this House on the 13th March, I realize that the words used by me in executing the action were unnecessarily harsh. I am sorry for the same.

Now, I wish to refer to a few points which are not in the Agenda. They relate to purely procedural matters. I have already told the House that the conduct of hon. Member Sri S. J. Ramaswamy on the 13th March was derogatory to the convention and rules of procedure of this House. The hon. Member met me this morning and he feels sorry for what had happened. If he realizes that, I only expect that he will express regret in the House. We can then drop the matter.

திரு. எஸ். ஜே. ராமசாமி : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, நான் இந்த இடத்தில் உட்கார்ந்திருக்கும்போது அது நடந்தது. தங்களை நோக்கி வந்தது அந்த எண்ணத்தில் வந்ததாக நான் நினைக்கவில்லை. தாங்கள் அப்படிச் சொன்னீர்கள், அமைச்சர் அவர்களைக் கேட்கவில்லை என்ற வேகத்தினால், தவறுதலாக.........

கனம் சபாநாயகர் : அந்த டீடெய்ல்ஸீக்குப் போக வேண்டாம்.

15th March 1965]

திரு. எஸ். ஜே. ராமசாமி : இந்த சபையின் கௌரவத்திற்கு குந்தகம் விளைவிக்கும் எண்ணம் இம்மியளவுகூட எனக்குக் கிடையாது. தங்களுக்கு எதிராகச் சொல்ல வேண்டும் என்ற எண்ணமும் கிடையாது.......

கனம் சபாநாயகர் : சரி. வருத்தத்தைத் தெரிவிக்கிறீர்கள். அப்படித்தானே ?

திரு. எஸ். ஜே. ராமசாமி : ஆம், என் வருத்தத்தைத் தெரிவிக்கிறேன்.

MR. SPEAKER : I would now like to refer to certain points and elicit the points of view of the Hon. the Leader of the House and also the Leaders of other Parties. They relate to the proceedings of the House which I am conducting.

The other day, i.e., on the 13th March, when the Hon. the Minister for Home, in his reply to the debate on the Police Demand used a certain word, which according to me was not parliamentary, the hon. Member Sri K. A. Mathialagan raised a point of order. I shall now read the relevant portions from the Official Proceedings :—

> " SRI K. A. MATHIALAGAN : Sir, on a point of order. I object to the word ***. The Hon. Home Minister should withdraw that word."

That was the point of order raised by the hon. Member Sri Mathialagan. The hon. Member was perfectly right in raising that point of order. But, I have had to ask for the views of the Hon. Minister on the point of order. After hearing his views, if I decided that it was an unparliamentary expression, I would have ordered its expunction or would have asked the Hon. Minister to withdraw the same. Under those circumstances, was it not the duty of the other Members sitting on either side to keep quiet, watch and wait and see what the reaction or decision of the Chair on the point of order was? Instead of doing that, what happened? I shall now read the further proceedings :—

> " SRI S. MADHAVAN : Sir, it is not parliamentary.
>
> MR. SPEAKER : The hon. Member Sri Mathialagan has already raised the point of order.
>
> SRI S. MADHAVAN : I also wish to raise the point of order.
>
> MR. SPEAKER : Why should he ? The hon. Member should not disturb the proceedings of the House.
>
> SRI S. MADHAVAN : I am not disturbing the proceedings of the House.
>
> MR. SPEAKER : The hon. Member need not get angry and shout.
>
> SRI S. MADHAVAN : I have got every right."

[Mr. Speaker] [15th March 1965

This is what happened the other day. What is the Chair to do in such matters? Rule 83 is very clear in this respect. This is what it states :—

> " The Speaker shall decide all points of order which may arise, and his decision shall be final. Any member may at any time submit a point of order for the decision of the Speaker but in doing so shall confine himself to stating the point. No debate shall be admissible on a point of order."

Now, a point of order had been raised by an hon. Member belonging to their own party and that too, by the present Deputy Leader of that party. I had to discharge my duty properly. So, before giving my ruling on that point of order, in fairness I must ask for the views of the Hon. Minister on the use of the word objected to. Before I could do that, if one Member after another, rose on points of order, was it not violation of the rules of procedure, or was it not obstruction of the proceedings of the House. I would very much like to know how far this sort of thing is approved by the hon. the Leader of the Opposition or the Deputy Leader.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, அன்று நடைபெற்ற அத்தகைய நிகழ்ச்சிகளை தாங்கள் இப்பொழுது சுட்டிக்காட்டினீர்கள். இந்த சட்ட மன்றத்தை எப்படி நடத்திச் செல்ல வேண்டும் என்று, அதற்கான ஒழுங்கு முறைகளை, விதி முறைகளை முறைப்படுத்தி, அதனை எல்லா கட்சி அங்கத்தினர்கள் ஆதாரவிலும் வைத்திருக்கிறோம். அந்த சட்ட ஒழுங்குக்கு உட்பட்டுத்தான் நடைபெற வேண்டும், நடத்திச் செல்ல வேண்டும் என்பதிலே ஆளும் கட்சியைப் போலவே எதிர் கட்சிகளும் விருப்பங்கொண்டு, அத்தகைய சட்டங்களுக்கு மதிப்புக் கொடுத்து நடத்த வேண்டும் என்ற மனப்பான்மையை உள்ளவர்களாக இருந்து வருகிறோம். அப்படிப்பட்ட விதிமுறைகளைக் கடைப்பிடிக்க நாங்கள் ஆயத்தமாக இருந்து வருகின்றோம். அந்த முறைப்படியே நடந்தும் வருகிறோம் என்றாலும், எதிர்பாராத வகையில் உணர்ச்சி வசப்பட்டு, பல நிகழ்ச்சிகள் நடைபெற்றிருந்தாலும், இனிமேல் இப்படிப்பட்ட ஒழுங்குப் பிரச்சினைகள் திரும்பி எழாத வகையில் எந்த வகையில் நடவடிக்கைகள் தங்களால் எடுக்கப்பட்டாலும், அந்த முயற்சியில் நாங்கள் எப்பொழுதும் ஒத்துழைப்புத் தருவோம் என்கிற உறுதிப்பாட்டினை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

MR. SPEAKER : I shall read some more portions from the proceedings.

" (There was shouting.)

> MR. SPEAKER : I cannot allow shouting in the House. If any hon. Member shouts, I will ask him to withdraw from the House. The hon. Member Sri Mathialagan has raised the point of order and the Hon. Minister will explain it. Why should there be all this trouble ?

SRI P. U. SHANMUGAM : Sir, I want a clarification.

MR. SPEAKER : No clarification is necessary.

15th March 1965]

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகர் அவர்களே, பொள்ளாச்சியில் 60, 70 பேர்கள் சுடப்பட்டு மதுக்கரையில் புதைக்கப்பட்டார்கள் என்பதற்கு ஆதாரம் இருக்கிறது. விசாரணையில் நிரூபிக்கிறேன் என்று சொன்ன பிறகும் அமைச்சர் அவர்கள் சொல்லிய வார்த்தை இந்தச் சபையின் பெருமைக்கும், கௌரவத்திற்கும் உகந்ததல்ல. ஆகவே தயவு செய்து அவர்கள் அதை திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எதிர்கட்சி அங்கத்தினர் 70 பேர்கள் என்று சொல்வது முறையா ? அவர்கள் கணக்கு கொடுக்கிறார்கள். நாங்கள் அது சரி இல்லை என்று சொல்கிறோம். அதில் என்ன தப்பு ?

* * *

Sri K. A. MATHIALAGAN : I submit that I have got every right to demand that the Hon. Minister should withdraw the word.

* * *"

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் உபயோகப்படுத்திய வார்த்தை அன்-பார்லிமெண்டரி வார்த்தை அல்ல என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

Mr. SPEAKER : I am here to decide the issue.

திரு. கே. ஏ. மதியழகன் : அதனால் மற்றவர்களும் சொல்ல நேர்ந்தது.

கனம் சபாநாயகர் : சொல்லலாமா ? Does the Hon. Member say that it is correct?

திரு. கே. ஏ. மதியழகன் : சொல்லக்கூடாதுதான். ஆனால், சபையின் முதல்வராக இருக்கக்கூடிய முதல் அமைச்சர் அவர்களே . . .

Mr. SPEAKER : When there are two parties, they may take even the most untenable stand. But it is for me to decide. The hon. Member Sri S. Madhavan wanted to obstruct the proceedings of the House by shouting and raising a point of order when I had not yet given my ruling on the point of order already raised by Sri K. A. Mathialagan.

திரு. கே. ஏ. மதியழகன் : சபையின் கௌரவத்தைக் காக்கவேண்டிய முதல் அமைச்சர் அவர்களே . . .

Mr. SPEAKER : That is not the issue. I want to know from the hon. Member Sri Mathialagan, whether he is supporting . . . .

Sri K. A. MATHIALAGAN : I am not supporting, Sir.

Mr. SPEAKER : Then why should the hon. Member speak?

* * *

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, ஒரே ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். கனம் உறுப்பினர் அவர்கள் எப்பொழுதும் போல் என் மீது பாய்கிறார். இது வேறு விஷயம். என் மீது பாயவேண்டிய நிமித்தம் இல்லை. ஒரு வார்த்தை பார்லிமெண்டரி வார்த்தையா அல்லது அன்பார்லிமெண்டரி வார்த்தையா என்பதை முடிவு செய்யவேண்டியவர் தாங்கள்தான் என்றாலும், அந்த வார்த்தை பார்லிமெண்டரி வார்த்தையா இல்லையா என்பதைக் குறித்துக்

*** **Expunged as ordered by the Chair.**

[திரு. எம். பக்தவத்சலம்] [15th March 1965

கருத்து தெரிவிப்பதற்கு இங்கேயுள்ள சர்க்கார்க் கட்சித் தலைவருக்கோ அல்லது உறுப்பினருக்கோ உரிமை உண்டு. அவ்வாறு கருத்துக்களை சொல்கிறோம். அதற்குப் பிறகு தாங்கள் முடிவு செய்கிறீர்கள். நான் சொன்னதே தவறு என்று கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்கள் சொல்வது மிகத் தவறு என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய கருத்தை நான் சொன்னேன். பிரிட்டிஷ் பார்லிமெண்டிலே கூட விவாதிக்கப்பட்டிருக்கிறது. எது பார்லிமெண்டரி எது அண்பார்லிமெண்டரி என்பதைக குறித்து May's Parliamentary Practice-லும் விவரிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதிலே என்னுடைய கருத்தைச் சொன்னேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, அன்று உள்துறை அமைச்சர் அவர்கள் ஒரு சொல்லைப் பயன்படுத்தினார்கள். அதைப்பற்றிய கருத்து மாறுபாடுகள், அத்தகைய நிலைமைகள் எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களுக்கு ஏற்பட்டன. அதையொட்டி கனம் முதல் அமைச்சர் அவர்கள் 'அது எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய சொல்லா ? இல்லையா ?' என்பதைக் குறித்து கருத்துக்களை எடுத்துத் தெரிவித்தார்கள். அவர் அவ்வாறு தெரிவிக்க நியாயம் இல்லை என்று நான் சொல்ல வரவில்லை. அந்தக் கருத்து ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்ற அடிப்படையில்தான் கனம் உறுப்பினர் அவர்கள் எடுத்துத் தெரிவித்தார்கள். அவர் தெரிவித்த முறை சரியல்ல என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். தங்கள் தீர்ப்பைப் பொருத்துத்தான் அந்தச் சொல் ஏற்றுக்கொள்ளத்தக்கதா அல்லவா என்பது அமையப் போகிறது. இந்த மன்றத்தில் பயன்படுத்தத்தக்க சொல்லா அல்லவா என்பது தாங்கள் அளிக்கக்கூடிய தீர்ப்பைப் பொருத்திருக்கிறது. 'உள்துறை அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு ஆதரவாக முதல் அமைச்சர் அவர்கள் சொன்னவுடனே மற்ற உறுப்பினருக்கு கருத்து சொல்கிற தகுதி உண்டா ?' என்று தாங்கள் கேட்கிறீர்கள். சொல்லக்கூடாது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

Mr. SPEAKER : If I ask the hon. the Leader of the Opposition, he can say that what the Hon. Home Minister said is unparliamentary. But, can another point of order be raised?

திரு. இரா. நெடுஞ்செழியன் : தங்கள் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியம் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அதற்கிடையில் குறுக்கிட்டுச் சொல்லக்கூடாது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனாலும்கூட, இந்த நிகழ்ச்சிகளெல்லாம் நாம் அனைவரும் விரும்பத்தகாத முறையில் அமைந்து விட்ட காரணத்தால் அமைச்சர் அவர்கள் இதுபற்றிக் குறிப்பிடத் துவங்கியதிலிருந்து நடைபெற்ற நிகழ்ச்சிகளை சட்டமன்ற நிகழ்ச்சிக் குறிப்புகளிலிருந்து எடுத்துவிடுவது எதிர்காலத்தில் சுமுகமாக நடத்திச் செல்வதற்கு எடுத்துக்காட்டாக பயன்படும் என்ற கருத்தின் அடிப்படையில் நான் இதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Sri R. V. SWAMINATHAN : Mr. Speaker, Sir, I want to make a submission, as one of the oldest Members of this House. I have seen many things in this House, including the use of unparliamentary words. Sir, I would like to suggest to the Hon. Speaker, if he is agreeable, that we can have a separate meeting attended by leaders of the Opposition Parties and the Government Party including some hon. Members or we can have a closed meeting without the Press. Sir, we can have an informal meeting in the afternoon for one or two hours when we can thrash out all the

15th March 1965] [Sri R. V. Swaminathan]

points—how the hon. Members should conduct themselves in the House and how they should use only parliamentary words. It is my painful duty to make this submission.

MR. SPEAKER : It is for the Leaders of Parties to decide, and I am quite agreeable. That is why I am bringing it to the notice of the House that so many praliamentary practices are not being properly observed by hon. Members.

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, இன்றைய தினம் தங்களாலும், எங்கள் கட்சி உறுப்பினர் திரு. இராமசாமி அவர்களாலும் சபையினுடைய பெருந்தன்மையும் கௌரவமும் மிகவும் உயர்ந்திருக்கிறது. நான் குறிப்பிட விரும்புவதெல்லாம், நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் நாட்டுக்கு முதல் அமைச்சராக இருந்தாலும் இந்த மன்றத்தைப் பொறுத்த அளவில், ஆளும் கட்சி, எதிர்க் கட்சி எல்லோரையும் நடத்திச் செல்கின்ற சபையின் முதல்வர் ஆவார்கள். அவர்கள் எங்களை வழி நடத்திச் செல்கிற விதத்திலே எங்களுடைய தலைவர் நாவலர் அவர்களுடன் சில சட்ட மன்ற விஷயங்களைக் கலந்து, அவர்களுடைய முடிவுகளை உங்களுக்குத் தெரிவிப்பதன் மூலமாகத்தான் தமிழ் நாட்டு சட்ட மன்றத்தினுடைய கௌரவம், அந்தஸ்து, பெருந்தன்மை இவை நிலைநாட்டப்படக் கூடும். அந்த வகையில் இருவரும் சேர்ந்து முயற்சித்தால் நல்லது என்று நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

MR. SPEAKER : The conduct of the Hon. the Chief Minister is not before the House now.

SRI RAMA. ARANGANNAL : Sir, I want to make a submission.

MR. SPEAKER : I am not against it. Now, the point is that when the House was considering a question—even assuming that the Hon. the Chief Minister supported a most untenable point on behalf of the Hon. the Home Minister—can another point of order be raised when that question has not been decided. That is the point.

SRI M. V. KARIVENGADAM rose—

MR. SPEAKER : My fear is that the hon. Member should not commit another breach of order. I am going to read some more portions of the proceedings. I want to spend some more valuable time of the House to point out the way in which hon. Members should conduct themselves in this House.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினைகளைப் பற்றி எல்லாக் கட்சிகளினுடைய தலைவர்களையும் அழைத்துவைத்துப் பேசி, தக்கதொரு முடிவு எடுத்து, அந்த முடிவின் படி நடப்போம் என்று உறுதியளிப்பதற்கு முயற்சி செய்தால் மிக நன்றாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அந்த அளவிற்கு தாங்கள் எல்லாக் கட்சிகளினுடைய தலைவர்களையும், மற்றும் முக்கியமானவர்களையும் அழைத்துவைத்து, அந்த இடத்திலே இந்தப் பிரச்சினையை குறித்து விவாதித்து நல்லதொரு முடிவு எடுத்து, அந்த முடிவின் படி நடப்பதற்கு முயற்சி செய்வது நல்லது என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

[15th March 1965

MR. SPEAKER : I would like to place some of the matters, that have happened, before the House. The House alone is the salvation for all of us, including the Speaker. It is not as if the Speaker is infallible.

Now, coming to the subject, a matter of privilege was raised by the hon. Member Sri S. Madhavan in my Chamber, on the statement of the Hon. Chief Minister made in the House about the conversation of Sri Mohan Kumaramangalam with the Superintendent of Police, Salem district. The hon. Member gave me notice of a privilege matter to the effect that Mr. Mohan Kumaramangalam gave a statement which varied from the statement of the Hon. Chief Minister. I told him in my Chamber itself that no matter of privilege arose over that. He told me that there were some Rulings and I asked him to produce them. He was not ready and he went away. Afterwards the hon. Member Sri Mathialagan came with a similar motion. He told me that he had worded it in a somewhat different manner and that therefore it came under privilege. I argued with him for about half an hour and told him that it would not come under privilege. Assuming that two Members gave notice of a privilege matter, one in one manner and the other in a different manner, or both of them in the same manner, that will not become a matter of privilege unless it is proved that there is clear suppression of matters which the Hon. Minister is bound to disclose. That was my plain statement. But, on 13th March 1965, when I said " Let us take up Demand No. XII ", the hon. Member Sri Madhavan raised a point of order as follows :

> "**திரு. செ. மாதவன் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், ஸார். நான் ஒரு உரிமைப் பிரச்சினைக்கு நோட்டீஸ் கொடுத்திருந்தேன். அது என்ன ஆனதுஎன்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்."

When once the Speaker has withheld his consent, there cannot be a point of order on the Ruling of the Speaker. How can I take up the matter in the House? So I told him as follows :—

> " அதுபற்றி கனம் அங்கத்தினர் என்னுடைய சேம்பரில் வந்து கேட்டுக்கொள்ளலாம் I am not taking it up here."

Then the hon. Member Sri V. Krishnamoorthy said " I want to know what the point of order raised by the hon. Member Sri Madhavan is ". Then the hon. Member Sri S. Madhavan rose on a point of order. If one after another is going to raise points of order, where is the end? Should not hon. Members obey the ruling of the Chair? I have plainly told in my Chamber itself that it is not a matter of privilege and I have withheld my consent. If, after that, the hon. Member comes here and raises a point of order, can it be taken as a point of order? Another Member wants to know what the point of order raised by Sri Madhavan is. If things go on like this, how can the Chair control the proceedings of the House?

I will read further from the proceedings :

> " MR. SPEAKER : There is no point of order. The hon. Member may want to know so many things. But this is not the place for me to explain all those things to him . . .

15th March 1965] [Mr. Speaker]

SRI V. KRISHNAMOORTHI : What is the point of order raised by the hon. Member Sri Madhavan ? That is what I would like to know.

MR. SPEAKER : The hon. Member may please resume his seat. I am not gonig to answer him."

This relates to a portion of the proceedings of the 13th March.

Then, in another place in the middle of the proceedings, this is what has happened. The Hon. Chief Minister referred to somebody having made some statement here and, when contacted by the students, said something outside. This is what appears in the proceedings :

"**திரு. இராம அரங்கண்ணல் :** எந்தக் கட்சி என்று சொல்ல வேண்டும்."

"**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எதிர்க் கட்சி நண்பர்கள் என்பேன்."

SRI V. KRISHNAMOORTHY : Sir, "unless the name is mentioned, it will be considered as false."

For one word used by the Hon. Home Minister, there was all this trouble. Here the hon. Member says "unless the name is mentioned, it will be considered as false."

Hon. Members are aware that a motion of privilege had been passed by this House, which had been referred to the Committee of Privileges and which is pending before it. Once it has gone there, it cannot be discussed in this House before the Report of the Committee is presented. It is in the nature of *sub judice*. The hon. Member Sri Krishnamoorthy wanted to say something. This is what appears in the proceedings :

"**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** நான் இந்த உரிமைப் பிரச்சினையில் சம்பந்தப்பட்டிருபபதால் ஒரு சில வார்த்தைகள் சொல்ல . . .

கனம் சபாநாயகர் : சம்பந்தப்பட்டவர் கலந்துகொள்ளாமல் இருப்பது நல்லது. கனம் அங்கத்தினர் உட்காரலாம்.

THE HON. SRI R. VENKATARAMAN : I do not know what the hon. Member is going to say. Perhaps he is going to say that he did not say what the paper has published in which case there will be confirmation. . .

"**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** நாங்கள் வெளி நடப்புச் செய்த சமயத்தில் நான் அந்த வார்த்தைகளை உபயோகித்ததாகத் தாங்கள் எடுத்துச் சொன்னீர்கள். அதற்கு நான் என்றென்றைக்கும் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதை முதலிலே சொல்ல விரும்புகிறேன்."

MR. SPEAKER : Is it a direct statement or an ironical statement? It is against the Chair. I left it there, because I did not want to take it seriously.

* * *

*** Expunged as ordered by the Chair.

[Mr. Speaker] [15th March 1965

I am placing all these facts before the House for what they are worth. All the leaders of parties or the hon. Members can sit together and discuss them. I am prepared to co-operate with any Committee that may be formed for this purpose. Anyhow, I would like to place all these things before the House.

III.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1965-66.

1. DEMAND NO. XIV—MEDICAL.

2. DEMAND NO. XV—PUBLIC HEALTH.

3. DEMAND NO. XXXVIII—CAPITAL OUTLAY ON PUBLIC HEALTH.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 9,34,92,500 under Demand No. XIV—Medical."

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, "மாவட்ட மருத்துவ மனைகள் அனைத்திலும் தற்போதுள்ள படுக்கை வசதியை இரட்டிப் பாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதற்காக" நான் கொடுத்துள்ள வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபிக்கிறேன்—

"That the allotment of Rs. 9.34.92,500 under Demand No. XIV—Medical be reduced by Rs. 100."

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 4,21,35,600 under Demand No. XV—Public Health."

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, "வெறும் குடிநீர்க் கிணறுகளை மட்டும் தோண்டுவதோடு நின்றுவிடாது ஒவ்வொரு சிற்றூருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டியது பற்றி விவாதிக்க" நான் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரோரணையைப் பிரேரேபிக்கிறேன்—

"That the allotment of Rs. 4,21,35,600 under Demand No. XV—Public Health be reduced by Rs. 100."

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 16.98.000 under Demand No. XXXVIII—Capital Outlay on Public Health."

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே துப்புரவப் பணிகள் சரிவர நடைபெறவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட நான் கொடுத்துள்ள வெட்டுப்பிரேரணையை பிரேரேபிக்கிறேன்.

"That the allotment of Rs. 16.98.000 under Demand No. XXXVIII—Capital Outlay on Public Health be reduced by Rs. 100."